பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 03 | வெள்ளிக்கிழமை | 18.08.2023 | அதிர்வு 17

## சூட்டுக் காயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம்!

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

மாத்தறை – வெலிகமை பிரதேசத்தில் வீதியோரத்திலிருந்து நேற்று இரவு இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 04▶

# குருந்தூர்மலையில் இன்று திட்டமிட்டவாறு பொங்கல்

## தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு பொலிஸ் கோரிக்கை நிராகரிப்பு

முல்லைத்தீவு, ஒகஸ்ட் 18

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் இன்று இடம்பெறும் பொங்கல் விழாவிற்கு தடைவிதிக்க வேண்டும் என பொலிஸார் முன்வைத்த விண்ணப்பத்தை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. 04▶





## மத வழிபாடுகளைத் தடுக்க எவருக்கும் உரிமை இல்லை

### ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

இந்த நாட்டில் மத வழிபாடுகளைத் தடுக்க எவருக்கும் உரிமை கிடையாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று அவர் மேலும் கூறுகையில் – 03▶

## 13 இன் முழு நடைமுறையாக்கத்திலிருந்து முன் நகர்ந்து நிரந்தரத் தீர்வை எட்டலாம்!

### ஈ.பி.டி.பி.யின் யோசனைத் திட்டத்தில் டக்ளஸ் விவரிப்பு

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தீர்த்து வைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளையும், பரிந்துரைகளையும் வரவேற்றுள்ள ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்த 03▶




## வவுனியாவில் நீர்குழியில் விழுந்து 2 மாணவர் சாவு

### விளையாட்டு போட்டி இடையே பம்பைமடுவில் நடந்த விபரீதம்



வவுனியா வலய மட்ட விளையாட்டு போட்டி வவுனியா 02▶

## இரகசியம்



'நாளை', 'நாளை' என்று இழுபட்ட பிள்ளையார் கல்யாணம் கடைசியில் நடக்கத்தான் போகின்றது போல.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டைத்தான் கூறுகிறேன். மூன்று வருடங்களுக்கு மேல் இந்தா, அந்தா என்று இழுபட்டு 02▶

# வவுனியா விபத்தில் ஒருவர் பலி!



வவுனியா ஈரற்பெரிய குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளார். வவுனியாவில் இருந்து ஈரற்பெரியகுளம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் அநுராதபுரத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார். வாகனத்தின் சாரதி சிறுகாயங்களிற்குள்ளாகினார். விபத்து தொடர்பாக ஈரற்பெரியகுளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வந்த தேசிய மாநாடு கடைசியில் ஒரு வழியாக அடுத்த மூன்று மாதங்களுக்குள் நடைபெறும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

அடுத்த வாரத்தில் மொரிஷியஸில் நடைபெறும் ஒரு மாநாட்டுக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அந்த நாட்டுக்குப் பயணமாகின்றார். சுமார் ஒரு வார காலப் பயணம். இந்த மாத முடிவுக்கு முன்னர் அவர் நாடு திரும்பி விடுவார் எனக் கூறப்பட்டது.

அதன் பின்னர் வரும் 2ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் மத்திய குழு வவுனியாவில் கூடுகின்றது.

அதில் தேசிய மாநாடு குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் எனக் கட்சியின் நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன. தேசிய மாநாட்டை எங்கு, எப்போது நடத்துவது என்பவை உட்பட்ட எல்லா விடயங்களும் 2 ஆம் திகதிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சியின் தலைவர் பதவியில் மாற்றம் வருமா, அடுத்த தலைவர் யார் என்பவை தான் தேசிய மாநாட்டில் ஹைலைட்ஸ் ஆக இருக்கும் என்பது தெரிந்ததே.

* * *

வடக்கு மாகாண ஆளுநர் கதிரையில் இருப்பவரை ஆற,அமர இருந்து வேலை செய்ய விட மாட்டார்கள் போலும். கொக்கி போட்டு நெண்டித் தள்ளும் கைங்கரியம் காலம் மாறாமல் தொடர்வதாகவே செய்தி.

மீண்டும் அப்பதவிக்கு வந்திருக்கும் திருமதி சார்ள்ஸைத் தொந்தரவுப்படுத்திக் கலைக்கும் கைங்கரியத்தை ஒரு குழு ஆரம்பித்து விட்டதாக உள்வீட்டுத் தகவல் ஒன்று கூறுகின்றது.

மொட்டைப் பெட்டிஷன்களில் இருந்து ஊழல் புகார் கடிதங்கள் வரை தாராளமாக எழுதிக் குவிக்கப்படுகின்றனவாம். எல்லாம் ஆளுநர் பதவியில் அவர் முன்னர் இருந்தபோது நடைபெற்றவை என்ற பெயரில் பழையவற்றைக் கிளறும் கைங்கரியந்தான்.

ஆனால் இந்தக் கிறுக்கல்களுக்கு எல்லாம் அதி உத்தமர் அசைந்து கொடுக்க மாட்டார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

பழைய குப்பைகளைக் கிளறுவது குறித்து அதி உத்தமர் சிரத்தை காட்ட மாட்டார், இப்போது புதிதாகப் பதவிக்கு வந்த பின்னர் ஏதாவது தவறு இருந்தால் சொல்லுங்கள், கவனிக்கலாம் என்பதுதான் அதி உத்தமர் சார்பில் இவ்விடயங்களைக் கையாளும் தரப்புகளின் நிலைப்பாடு எனத் தெரிகிறது.

அதுவும் சரிதான். பழைய குற்றச்சாட்டுக்கள், குளறுபடிகள், ஊழல்கள் எல்லாவற்றையும் கவனத்தில் எடுப்பது என்றால், இப்போது தமக்குப் பக்கத்தில் இருக்கும் அரைவாசிக்கும் மேற்பட்ட அமைச்சர்களை அவர் பதவியில் இருந்து கலைக்க வேண்டும்.

அமைச்சர்கள் பற்றிய பழைய பட்டோலைகளையே கவனத்தில் எடுக்காத அதிஉத்தமர், வடக்கு ஆளுநர் விடயத்திலும் பழைய பல்லவிகளை செவிமடுக்க மாட்டார் – கவனத்தில் கொள்ள மாட்டார் – என்றே கருதப்படுகின்றது. அந்த வகையில் திருமதி சார்ள்ஸ் அம்மையார் சற்று நிம்மதியாக அமர்ந்திருந்து பணியாற்ற முடியும்....!

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று நடைபெற்றுக் கொண்போது பக்கத்தில் இருந்த நீர்குழியில் விழுந்து இரு மாணவர்கள் மரணமடைந்தனர். அப்போது ஏற்பட்ட குழப்ப நிலையில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மீதும் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா வலய மட்ட விளையாட்டு போட்டிகள் கடந்த இரு தினங்களாக பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வந்தன.

மைதானத்தில் மெய்வன்மை விளையாட்டுப் போட்டி இடம்பெற்றபோது மைதானத்தின் அருகில் காணப்பட்ட நீர் குழியில் இரு மாணவர்கள் தவறுதலாக விழுந்துள்ளனர். வவுனியா பட்டாணிச் சூர் முஸ்லிம் மகா வித்தியாத்தில் கல்வி கற்கும் 15 மற்றும் 16 வயதை உடைய இரு மாணவர்களே இப்பட. நீரில் விழுந்துள்ளனர்.

மாணவர்கள் விழுந்ததை அவதானித்தவர்கள் கடமையில் இருந்த ஆசிரியருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, பூவரசங்குளம் பொலிஸார், விசேட அதிரடி படையினர் அவ்விடத்திற்கு விரைந்து பல்கலைக்கழக மாணவர்கள், ஊர் மக்கள் ஆகியோருடன் இணைந்து சுமார் ஒரு மணி நேரத் தேடுதல் முயற்சியின் பின்னர் அந்த மாணவர்களை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட இரு மாணவர்களும் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும், அவர்களை வைத்தியசாலைக்கு அனுமதிப்பதற்கு முன்பே அவர்கள் இறந்துள்ளார்கள் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சம்பவத்தை அறிந்து அங்கு சென்ற வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் மீதும், தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது அவ்விடத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் குவிந்திருந்தமையால் பதற்ற நிலை ஏற்பட்டது.

பல்கலைகழக மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் துணைவேந்தரை பாதுகாப்பாக பல்கலைகழகத்திற்கு அழைத்து சென்றமையுடன், பூவரசங்குளம் பொலிஸார் மற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்புடன் அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தமிழரை மறந்த உலகம்

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறையாக்கம் செய்து, அதிலிருந்து முன்நகர்ந்து, நிரந்தரமான - நிலையான - நின்று நீடிக்கத் தக்க - நீதி, நியாயமான - தீர்வு ஒன்றை எட்ட முடியும்.

- இப்படித் திரும்பவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வலியுறுத்தி இருக்கின்றது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்த நடைமுறையாக்கம் தொடர்பில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளின் கருத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்தார். அதற்குத் தாம் அனுப்பி வைத்த யோசனைத் திட்டத்திலேயே இவ்விடயத்தை திரும்பவும் சுட்டிக்காட்டி இருக்கின்றார் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா.

இது ஒன்றும் அவர் புதிதாகச் சுட்டிக்காட்டும் விடயமே அல்ல. 1994 இல் நாடாளுமன்ற அரசியலுக்குள் முனைப்பாக அவர் நுழைந்த காலம் தொடக்கம், கடந்த மூன்று தசாப்த காலமாக அவர் வலியுறுத்தி வரும் மாறாத நிலைப்பாடுதான் இது. பெரும்பாலும் அந்த வலியுறுத்தலின் வாசகங்கள் கூட மாற்றமில்லாமல் அப்படியே நீடிக்கின்றன.

டக்ளஸ் தேவானந்தாவின் இந்தப் பரிந்துரையை அப்படியே ஏற்றுச் செயற்பட்டாவது இனப் பிரச்சினையைத் தீர்க்க இயலாதா என்று தென்னிலங்கை ஏங்கிய - ஆதங்கப்பட்ட - ஒரு காலம் இருந்தது.

அப்போது தமிழரின் தேசிய இனப் பிரச்சினையைப் பிரதிபலிக்கும் வலுவான சக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகள் களத்தில் இருந்தனர்.

ஆயுதமேந்திப் போராடிய டக்ளஸ் தேவானந்தா போன்றோர், நாடாளுமன்ற அரசியலுக்குத் திரும்பி, மென்மையான குரலில், அமைதியாக - சாந்தமாக - இணக்கமான தீர்வொன்றுக்காக - இப்படி யோசனை கூறிய போது, புலிகள் முன்னெடுத்த தீவிரமான யுத்தத்தின் குண்டு மற்றும் பீரங்கிச் சத்தங்கள், முழக்கங்கள், பேரழிவுகள் போன்றவற்றுக்கு மத்தியிலும் அந்த தீர்க்கமான குரல் தென்னிலங்கையின் காதுகளில் விழுந்தது. சர்வதேசத்தின் செவிப்பறையைக் கூட எட்டியது.

ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது.

இந்தியா உட்பட்ட சர்வதேசத்தின் நேரடிப் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு மூலம் விடுதலை புலிகள் அழித்து ஒழித்து அடக்கப்பட்டு, இல்லாமலாக்கப் பட்டு விட்டனர்.

இதுவரை காலமும் சர்வதேசத்தின் காதில் ஒங்கி ஒலித்த தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்கான கோரிக்கைக் குரல் யுத்தம் அடங்கியதும் - தமிழர் தரப்பு ஆயுதப் போராட்டத்தில் அடக்கப்பட்டதும் - சர்வதேசத்தின் காதுகளிலும் விழவில்லை. தென்னிலங்கையின் சிந்தனையையும் சிரத்தையையும் கூட எட்டுவதாகவும் இல்லை.

அமைச்சர் டக்லஸ் கூறுவது போல 13 ஆவது திருத்தத்தின் முழுமையான நடைமுறையாக்கத்தில் இருந்து முன்நகர்ந்து, படிப்படியாக முன்னேறி, நிரந்தரமான - நிலையான - நீடித்த - நீதி, நியாயமான - தீர்வைக் காணும் எண்ணமும் தென்னிலங்கைக்குப் போய் விட்டது.

அவரது ஜனாதிபதியே இப்போது '13 மைனஸ்' பற்றி பேசும் நிலைமைதான் உள்ளது. புலிகள் இல்லாததால் தமிழருக்கு வந்த பின்னடைவு இது...!

## 13 இன் முழு நடைமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னெடுப்புக்கள் அர்த்தபூர்வமானவையாக அமைய வேண்டுமாயின் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பாக விரைவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் அமுல் படுத்தல் தொடர்பில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்ப்பாக நேற்று புதன்கிழமை முன்தினம் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளப் பாதுகாப்பு, வனஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றின் சில முறையற்ற செயற்பாடுகள் தமிழ் மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் வகையில் இருக்கின்றன என அந்த ஆவணத்தில் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், தொல்லியல் ஆய்வு செயற்பாடுகள் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த வரலாற்றுத்துறை நிபுணர்களின் பங்குபற்றுதல் மற்றும் கலந்தாலோசனைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டுமே தவிர, தொல்லியல் திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்தில் இருக்கின்ற உயர் அதிகாரிகள் சிலரின் விருப்பு வெறுப்பு சார்ந்த முன்னெடுப்புக்களாக அமைவதை அனுமதிக்க கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறாளை முருகன் ஆலயம், கீரிமலை தீர்த்தக் குளம் மற்றும் பருத்தித்துறை இறங்குதுறை போன்ற பகுதிகளை, தொல்லியல் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப் படுத்தி அண்மையில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பாக இந்த ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. துறைசார் நிபுணர்கள், சம்பந்தப்பட்ட பிரதேசத்தினை தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் போன்ற யாருடைய கருத்துக்களும் உள்வாங்கப்படாமல் கொழும்பு அதிகாரிகளினால் வெளியிடப்பட்டுள்ள அந்த வர்த்தமானில் உள்ளடக்கப்பட்டுள்ள பறாளை முருகன் ஆலயம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள காரணங்கள் தவறானவை என்பதை வரலாற்றுத் துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று, வனவளப் பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகள் சிலவும், தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு மாறாக வடக்கு கிழக்கு பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான விடயங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், முன்னெடுக்கப்படுகின்ற எவ்வகையான முயற்சிகளும் வெற்றியளிக்காது எனவும் தேசிய நல்லிணக்கத்தினை வலுப்படுத்த உதவாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற முடியும் என்ற ஈ.பி.டி.பி. கட்சியின் நீண்ட கால நிலைப்பாடு குறித்த ஆவணத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுல்ப்படுத்துவதற்கு சாத்தியமான 3 கட்டப் பொறிமுறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மத வழிபாடுகளைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"எமது நாடு ஜனநாயக நாடு. இங்கு இன, மத ரீதியில் வன்முறைகளைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிட எவருக்கும் அனுமதி இல்லை. எந்த மதத்தினரும் எங்கும் சென்றும் சுதந்திரமாக வழிபட முடியும். அந்த வழிபாடுகளைத் தடுக்க எவருக்கும் உரிமை கிடையாது.

இன, மத ரீதியில் வன்முறைகளைத் தூண்டும் வகையில் சிலர் வெளியிடும் கருத்துக்கள் அண்மைய நாள்களாக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன. இப்படியான நிலைமைக்கு நாம் இடமளிக்க முடியாது. சட்டம் தன் கடமையைச் செய்யும். அதன் பிடியிலிருந்து எவரும் தப்ப முடியாது." – என்றார்.

## குருந்தூர் மலையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பொங்கல் வழிப்பாட்டை தடுக்க கல்கமுவ சாந்த போதி தேரருக்கோ அல்லது அருண் சித்தார்த்துகோ எந்த விதமான அதிகாரமும் இல்லை எனவும் முல்லைத்தீவு நீதிமன்று கட்டளையாக் கியுள்ளது.

குருந்தூர் மலையில் இன்று ஏற் பாடு செய்யப்பட்டுள்ள பொங்கல் இடம் பெற்றால் இரண்டு குழுவினருக்கிடை யில் ஏற்படக் கூடிய கருத்து முரண்பாடு உணர்ச்சிகரமான விடயங்கள் என்பதால் அது மதக்கலவரமாக உருவாகி உயிரா பத்து ஏற்படுத்தக்கூடும் என முல்லைத் தீவு பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ள னர்.

குருந்தூர்மலையின் அமைவிடத் தின் அடிப்படையில் அவ்வாறான ஒரு கலவரம் ஏற்படுமாயின், அதனை தடுப் பதற்கு மிகவும் கடினமாகும் எனத் தெரி வித்து குற்றவியல் நடைமுறை கோவை பிரிவு 106 (01)கீழ் முல்லைத்தீவு நீதி வான் நீதிமன்றில் அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ள முல்லைத்தீவு பொலிஸார், பொங்கல் வழிபாட்டுக்கு எதிராக தடை உத்தரவை கோரினர்.

இந்த வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, புராதன சின்னங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகை யில் அந்த பிரதேச மக்கள் தங்களது மத ரீதியான பூஜை வழிபாடுகளை மேற் கொள்ளலாம் எனத் தீர்ப்பளித்துள் ளார்.

ஒருவரது மத வழிபாடுகளுக்கு மற்றைய தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக் கின்றார்கள் என்பதற்காக ஒருவரது மத வழிபாடுகளை தடுக்க தடை உத்தரவு வழங்க முடியாது எனக் கட்டளையிட்டு, பொலிஸாரின் தடையுத்தரவுக் கோரிக் கையை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

அத்துடன் பொங்கல் வழிபாட்டை விகா ராதிபதி சாந்தபோதி தேரரோ அல்லது அவருடன் வரும் குழுவினரோ, அருண் சித்தார்த் என்பவரோ அல்லது அவருடன் வரும் குழுவினரோ தடுக்க எந்தவிதமான அதிகாரமும் இல்லை எனவும் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

**பொங்கல் பொங்குவது எப்படி?**

இதேவேளை, குருந்தூர் மலை தொல்பொருள் பாதுகாப்பு காப்பகமாக காணப்படுவதனால் இன்றைய தினம் எவ்வாறு பொங்கல் வழிபாடுகளை மேற் கொள்ள வேண்டும் என்பது தொடர்பான நிபந்தனைகளை தொல்பொருள் திணைக்களம் விதித்துள்ளது.

குருந்தூர் மலையின் நிலம் மற்றும் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகை யில் திறந்த வெளியில் தொல்பொருள் அல்லாத கல் மீது இரும்புத் தகடு வைத்து அதன மீது தொல்பொருள் அல்லாத கற்களை பயன்படுத்தி அடுப் பினைத் தயார் செய்யுமாறு அந்த திணைக்களம் கூறியுள்ளது.

தீ மூட்டும் போது வனப் பாதுகாப்புத் துறையின் சட்ட விதிகள் மற்றும் விதிமுறை களைப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. நிலம் மற்றும் சுற்றுச் சூழ லுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நினைவுச் சின்னங்களிலிருந்து விலகி ஸ்ரீலங்கா தொல்லியல் துறை அதிகா- ரிகளினால் சுட்டிக்காட்டப்படும் இடத்தில் பொங்கல் வழிபாட்டிற்கு பயன்படுத்து மாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அகழ்வு செய்யப்பட்ட எல்லைகளில் உள்ள தொல்பொருள் சின்னங்கள் அபாயகரமான நிலை யிலுள்ளமையினால் அதன் எல்லை அரண்களில் நடக்க வேண்டாம் என கூறப்பட்டுள்ளது.

அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட நினைவு சின்னங்கள் மீது உணவு, பழங்கள், திரவப் பொருள்கள், தேங்காய் போன் றவற்றை வைக்க வேண்டாம் எனவும் தேங்காய் உடைத்தல், பால் ஊற் றுதல் போன்ற திரவப் பொருள்களைத் தெளிக்க வேண்டாம் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

பொங்கல் நடவடிக்கையினால் தொல்பொருளியல் இடம், நிலத்திற்கு கீழ் உள்ள தொல்பொருள்கள் மற்றும் கட்டமைப்புக்களுக்கு சேதம் ஏற்படுத்த கூடாது, பொங்கல் வழிபாட்டினால் அங்கு வழிபட வரும் ஏனைய தரப்பினருக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது என தொல்பொருள் திணைக்களம் நிபந் தனை விதித்துள்ளது.

## கூரிய ஆயுதத்தால் தாக்கி வயலில் ஒருவர் படுகொலை

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெனெரிலாவல வயல் பகுதியில் பரட்டா வல பாலத்திற்கு அருகில் வெட்டுக்கா யங்களுக்கு உள்ளான நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளார் என எல்பிட் டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதான நபரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் தலை மற்றும் கைக ளில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. அந்த நபர் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொல்லப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நீதிவான் விசாரணை இடம்பெற்றுள்ளதுடன், பிரேத பரி சோதனை இன்று நடைபெறவுள்ளது.

## சூட்டுக் காயங்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

அப்பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள் ளைகளின் தந்தையான எஸ். ரத்னஸ்ரீ (வயது 44) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசார ணைகளை மேற்கொண்டு வரும் பொலி ஸார், இந்த நபர் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார் என்றும், கடந்த மாதம் வழக்கு ஒன்றில் கைதான அவர், கடந்த வாரம் பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தார் என்றும் தெரிவித்துள்ளனர்.

அலை ஓசை
Singhams Media
அலை ஓசை
துல்லியமான ஒலிநயத்துடன் உங்கள் நிறுவனங்களின் பெயர்களை ஒலிபரப்பு செய்து கொள்ள நாடுங்கள்.
திருநெல்வேலி பகுதியில்.
ஆடியபாதம் வீதி, திருநல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 076 610 5467, 077 124 2732









# Pearl Island Inn

## Hotel & Restaurant

**Dine - in | Take Away | Soft Drinks**

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்

உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),

உலகத் தரம் வாய்ந்த

யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்

உணவு வகைகள்

மற்றும்

குளிர்பானங்களை இங்கிருந்தும்

உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று

சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**

S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**

077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com



# சர்வதேச சமூகம் சரியான மொழியில் தீர்விற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து



அரசமைப்பில் குறிப்பிட்டுள்ளபடி மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை வழங்குவதா, வேண்டாமா, பதின்மூன்று வேண்டுமா, வேண்டாமா என்ற பட்டிமன்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், தமிழ் மக்கள்மீது துவேஷங்களை விதைத்தவர்கள் சிங்கள அரசியல் தலைமைகளே என்பதையும் தமிழ் மக்கள் இலங்கையில் அச்சமின்றி வாழ்வதற்கு அவர்களின் வாழ்வுரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்பதையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை உரிய முறையில் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்குப் புரியும் மொழியில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக மாகாணசபை முறைமை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அந்த மாகாணசபைக்கான அதிகாரங்களை பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜே.ஆர். ஜெயவர்த் தன அரசாங்கம் நிறைவேற்றியது. 1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29ஆம் திகதி இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகியிருந்தபோதிலும்கூட, அது இனப்பிரச்சினைக்கான ஒரு முழுமையான தீர்வு அல்ல என்ற காரணத்தால் 2009ஆம் ஆண்டுவரை யுத்தம் நீடித்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான காலத்திற்கும் 2009ஆம் ஆண்டுக்கும் இடையில் மாறிமாறி வந்த இலங்கை அரசாங்கங்கள் புதிய புதிய தீர்வுத்திட்டங்களை உருவாக்கின. மங்களமுனசிங்க தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒரு தீர்வுத்திட்டத்தை வெளியிட்டது. சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபொழுது, அவர் ஒரு தீர்வுத் திட்டத்தை வெளியிட்டார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபொழுது, பேராசிரியர் திஸ்ஸவிதாரண தலைமையில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து ஒரு தீர்வுத்திட்டத்தை வெளியிட்டன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தின் பின்னர், 13க்கு அப்பால் சென்று பிரச்சினைகளைத் தீர்ப்பேன் என ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கும் இந்திய தலைவர்களுக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் வாக்குறுதிகளை வழங்கியுள்ளார். இந்த அனைத்து முயற்சிகளும் பதின்மூன்றுக்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கான தீர்வை வெளிக்கொண்டுவந்தன. அது மாத்திரமல்லாமல், யுத்தம் நடைபெற்றபொழுது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ்/ம் விடுதலைப. புலிகளின் சார்பில் பாலசிங்கம் அவர்களும் சமஷ்டி தொடர்பில் கலந்துரையாடுவதற்குச் சம்மதம் தெரிவித்து ஓர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்கள். அதுவே ஒஸ்லோ பிரகடனம் என அழைக்கப்படுகிறது.

நிலைமை இவ்வாறிருக்க, இப்பொழுது பதின்மூன்றை முழுமையாக நிறைவேற்றுவதா, இல்லையா என்ற கருத்தாடல்கள் ஒருபுறமும், பதின்மூன்றிலிருந்து எவற்றையெல்லாம் நீக்கிவிடலாம் என்ற கருத்தாடல் இன்னொரு புறமும், பதின்மூன்று என்பதே வேண்டாம், தமிழ் மக்கள் வாயைப் பொத்திக் கொண்டிருந்தால் போதுமானது என்ற சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகள் மற்றொருபுறமும் இருந்துகொண்டு பதின்மூன்றாவது திருத்தம் என்பது பந்தாடப்படுகிறது.

அடிப்படையில் சிங்கள மக்கள் தாம் மாத்திரம்தான் இந்த நாட்டிற்குச் சொந்தமானவர்கள் என ஒரு பிழையான கற்பிதத்தைக் கொண்டுள்ளார்கள். தமிழர்கள், முஸ்லிம்கள் எல்லோரும் வந்தேறு குடிகள் எனவும், இவர்கள் விரட்டப்படவேண்டும் என்ற சிந்தனையும் சிங்கள மக்கள் மத்தியில் இருக்கின்றது. பௌத்த பிக்குகள் சகல அரசியல் கட்சிகளுடனும் இணைந்து இது சிங்கள, பௌத்த நாடென்ற ஒரு பொய்யானதும் தவறானதுமான பிம்பத்தை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கியிருக்கின்றனர். இன்று அனைத்து சிங்கள அரசியல் கட்சிகளும் அதிலிருந்து மீளமுடியாத நிலைக்குச் சென்றுள்ளன. யுத்தம் நடைபெற்றபொழுது தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வழங்குவதற்கு தயாராக இருந்தவர்கள் யுத்தம் முடிந்த பிறகு எதனையுமே கொடுக்கக்கூடாது என்ற நிலைக்கு வருவதாக இருந்தால் இவர்களுடன் பேசுவதில் அர்த்தம் ஏதும் இருக்கிறதா என்று எண்ணத்தோன்றுகின்றது.

ஒரு விடயத்தை சிங்கள அரசியல் கட்சிகளும் சிங்கள சமூகமும் புரிந்துகொள்ள வேண்டும். எவ்வளவுதூரம் நீங்கள் இந்த மண்ணின் மைந்தர்கள் என்று உங்களைக் கொண்டாடுகிறீர்களோ அதற்கும் மேலதிகமாக இந்த மண்ணின் பூர்வீகக் குடிகளாக இந்த மண்ணின் மைந்தர்களாக இருப்பவர்கள் நாங்கள். ஆறாம் நூற்றாண்டில் சிங்கள மொழி உருவாகும்வரையில் நீங்கள் கூறுகிற விஜயன் உட்பட இந்த நாட்டிலிலுள்ள அனைவரும் தமிழே பேசினார்கள். கடைசி கண்டிய மன்னான ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனும் தமிழில்தான் கையெழுத்திட்டார். அது இன்றும் உங்கள் அருங்காட்சியகத்தில் இருக்கின்றது. ஆகவே உங்களுக்கு இருக்கின்ற அனைத்து உரிமைகளும் எங்களுக்கும் இருக்க வேண்டும் என்று நாங்கள் கேட்கிறோம். அவ்வாறு இருந்தால் நீங்களும் நாங்களும் சகோதரர்களாக வாழமுடியும். ஆனால் பிழையான போலியான சித்தாந்தத்தின் காரணமாக, பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழர்களுக்குமேல் கொலைவெறித் தாக்குதல்களை நடாத்துவதும், தமிழர்கள் கொல்லப்படுவதும், இடம்பெயர்வது என்பதும் சுதந்திரத்திற்குப் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடந்தேறியுள்ளன. இவ்வாறான இனவாத செயலே தமிழர்களை தனிநாடு கேட்கத் தள்ளியது.

சிங்கள அரசியல் சமூகத்தின் மத்தியில் இருக்கக்கூடிய முரண்பாடான இந்த நிலைமைகளை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை மேற்கண்ட எமது கருத்துகள் புலப்படுத்தியிருக்கும். ஏறத்தாழ எழுபது ஆண்டுகாலமாக தமிழ் மக்கள் தமது உரிமைக்காக தொடர்ந்து முன்னெடுக்கும் இந்தப் போராட்டத்தை இந்தியாவும் சரி சர்வதேசமும் சரி சரியான முறையில் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்லர்.

ஆனால்,இன்று யுத்தம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், பழைய செயற்பாடுகளை இவர்கள் மீண்டும் ஆரம்பிக்கிறார்கள்.

நாட்டின் பொருளாதாரம் ஏன் சீரழிந்து போனது என்பது பற்றிக் கூட இவர்கள் சிந்திக்க விரும்பவில்லை. 35வருட கால யுத்தத்தால் இந்த நாடு எவ்வளவுதூரம் அழிவுகளைச் சந்தித்தது என்பதை விளங்கிக்கொள்ளவும் மறுக்கின்றார்கள். வடக்குக்குப் போய் தமிழன் தலையைக் கொண்டுவருவோம் என்றும், தமிழனுக்கு எதுவுமே கொடுக்கக்கூடாது என்றும், பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்கள் கொடுத்தால் நாடே பிளவுபட்டுப்போகும் என்றும் பிழையானதும் தவறானதுமான இனவாதக் கருத்துகளை மீண்டும் மீண்டும் சிங்கள மக்கள் மத்தியில் திணிக்கின்றார்கள்.

குறைந்தபட்சம் இலங்கைக்கு ஒரு பொருளாதார மீட்சி ஏற்பட வேண்டுமாக இருந்தால், அந்த பொருளாதார மீட்சிக்காக இந்தியாவும் உலக நாடுகளும் இலங்கைக்கு உதவி செய்கின்ற இந்த வேளையில், இந்த நாட்டில் நிரந்தரமான ஒரு பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமாயின், தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகள் அனைத்தும் வழங்கப் படவேண்டும் என்பதை சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்குத் தெளிவான மொழியில் எடுத்துரைக்க வேண்டும். இல்லையேல் நீங்கள் கொடுக்கின்ற உதவிகளும் விழலுக்கிறைத்த நீராகிவிடும். - என்று உள்ளது.

# வவுனியா இரட்டை கொலையுடன் தொடர்புடைய வாகனங்கள் மீட்பு!

வவுனியாவில் இடம்பெற்ற இரட்டை கொலை வழக்கின் சந்தேகநபர்கள் பயன்படுத்திய வாகனங்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணை பிரிவினரால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது டிப்பர், பட்டா ரக வாகனம் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பவே மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு ஒன்றில் நுழைந்து தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் உட்பட ஆறு சந்தேக நபர்கள் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தலைமறைவாகியுள்ள பிரதான சந்தேக நபருக்கு சொந்தமானதும், அந்தக் குற்றச்செயலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் சந்தேகிக்கப்படும் வாகனங்கள் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், குற்றப்புலனாய்வு பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.

# ஒக்டோபரில் வருகின்றது சீனக் கப்பல் உறுதிப்படுத்தியது இலங்கை கடற்படை

## இந்தியா கழுகுப் பார்வை



சீனாவின் ஆய்வுக் கப்பலான ஷின் யான் 6 கப்பல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளது என்று இலங்கை கடற்படை உறுதிப்படுத்தியது.

இந்தக் கப்பல் 17 நாள்கள் நாட்டில் தங்கியிருந்து இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

மேலும் ஞாை லுயெ 6 எனும் சீன ஆய்வுக் கப்பல் நாரா நிறுவனத்துடன் இணைந்து ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகவும் கடற்படை குறிப்பிட்டுள்ளது.

ரு/ஹனு பல்கலைக்கழகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், குறித்த ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருகின்றது என்று நாரா எனப்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நீர் மாதிரிகளை எடுப்பதற்காக தமது நிறுவனம் கப்பலுடன் தொடர்புகொள்ளும் என்றும் நாரா நிறுவனம் தெரிவித்திருந்தது.

எனினும், ஞாை லுயெ 6 கப்பலுக்குள் பிரவேசிப்பதற்கு தமது ஆய்வாளர்கள் அனுமதி கோரிய போதிலும் நேற்று முன்தினம் பிற்பகல் வரை அனுமதி கிடைக்கவில்லை என்று ரு/ஹனு பல்கலைக் கழகத்தின் கடல்சார் தொழில்நுட்ப பீடம் தெரிவித்துள்ளது.

ஞாை லுயெ 6 கப்பலானது கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியும் இலங்கைக்கு வருகை தந்ததுடன், 10 நாள்கள் இலங்கைக் கடற்பரப்பில் நங்கூரமிட்டிருந்தது.


கடந்த சில வருடங்களாக இலங்கைக்கு வருகை தந்துள்ள இவ்வாறான கப்பல்கள் தொடர்பில் ஆராய்ந்த போது, அவற்றில் பெரும்பாலானவை சீனாவை சேர்ந்த ஆய்வுக் கப்பல்களாகவே உள்ளன.

Shi Yan 6, Shi Yan 1, Shi Yan 3, Xiang Yang Hong 3, Xiang Yang Hong 18, Xiang Yang Hong 1, Xiang Yang Hong 6, Xiang Yang Hong 19 ஆகிய கப்பல்கள் இலங்கைக்கு இதுவரை வந்துள்ளன.

இந்தநிலையில் Shi Yan 6 கப்பல் இலங்கைக்குவருகைதருவதுதொடர்பில் கவனம் செலுத்தி வரும் இந்தியா, இராஜ தந்திர மட்டத்தில் உரிய தரப்பினருக்கு அதனை அறிவித்துள்ளதாக அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்பருட்டி நீச்சல் போட்டியில் பரபரப்பை ஏற்படுத்திய மாதுக்கள்





நான்கு பேரப்பிள்ளைகள் பாட்டியும் ஆறு பிள்ளைகளின் தாயுமான 56 வயதான பெண்மணி ஒரு கடல் மைல் தூரத்தை நீந்திக் கடந்து மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டார்!

நான்கு பிள்ளைகளின் தாயான 40 வயதுப் பெண்மணி முதலாமிடத்தையும், மூன்று பிள்ளைகளின் தாயும் இரண்டு பேரப்பிள்ளைகளின் பாட்டியுமான 44வயது பெண்மணி இரண்டாமிடத்தையும் கடல் நீச்சல் போட்டியில் பெற்றுப் பெரும் பரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

வடமராட்சி வடக்கு இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 67 ஆவது ஆண்டு விழாவும், காண்டீபன் விளையாட்டு கழகத்தின் மாபெரும் விளையாட்டுப் போட்டியும் நேற்று இடம்பெற்றன. இதில் பெண்களுக்கான ஒரு கடல் மைல் நீச்சல் போட்டி இடம்பெற்றது.

இதன் போதே குறித்த வயோதிப மாதுக்கள் நீந்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

இதில் ஆண்களுக்கான நீச்சல், படகோட்டப் போட்டிகளும் இடம்பெற்றன. ஆயினும் பெண்களுக்கான நீச்சல் போட்டியில் வயோதிப மாதுக்களின் நீச்சல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

பருத்தித்துறை– தென்னியம்மன் முனையில் இருந்து இன்பசிட்டி வரை நீச்சல் போட்டி இடம்பெற்றது.

# குருந்தூர்மலையை வைத்து இனவாதச் செயற்பாடுகளாம்

## ஆரியகுளம் நாகவிகாரையின் விகாராதிபதி விசனம்

– எஸ்.நிதர்ஷன் –

குருந்தூர்மலை மற்றும் தையிட்டி திஸ்ஸ விகாரையை வைத்து இனவாதிகள் இனவாத ரீதியான செயல்பாடுகளை முன்னெடுக்கின்றனர் என்ச் யாழ் ஆரியகுளம் நாகவிகாரையின் விகாராதிபதி தெரிவித்தார்.

இந்து மற்றும் பௌத்த மதகுருமார்களுக்கு இடையில் யாழ் ஆரியகுளம் நாகவிகாரையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

நாட்டில் மத ரீதியான செயற்பாடுகளை ஒவ்வொரு மதத்தவர்களும் முன்னெடுக்கின்ற போது இனவாதிகளின் இனவாத ரீதியான செயற்பாடுகள் காரணமாக அவை இனங்களுக்கிடையே பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக குருந்தூர்மலை மற்றும் தையிட்டி திஸ்ஸ விகாரையை வைத்து இனவாதிகளின் இனவாத செயல்பாடுகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

இந்தப் பிரச்சனைக்கு தீர்வாக குருந்தூர் மலை அருகில் சிவன் கோவில் ஒன்றை அமைத்து இரு மதங்களுக்கு இடையே ஒற்றுமையை உருவாக்க முடிவு செய்துள்ளோம்.

எனவே இனவாத செயல்பாடுகளுக்குத் துணை போகாது சமாதானமாக நாட்டில் நல்லிணக்கத்தை வளர்க்க அனைவரும் முன்வர வேண்டும்

நாளைய (இன்றைய) தினம் குருந்தூர் மலையில் எந்த விதமான பொங்கல் நிகழ்வுகளை இந்துகளோ அல்லது பௌத்தர்களோ மேற்கொள்ள கூடாது என்றும் அந்த இடத்திற்கு யாரும் செல்ல வேண்டாம் என்றும் மதகுருமார்கள் ஆகிய நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.



சில தரப்புக்கள் அரசியல் இலாப நோக்கில் இனவாத செயல்பாடுகளை தொடர்ந்து செய்து வருகின்றன.

மதவாத, இனவாத ரீதியான செயற்பாடுகளுக்கு முற்றுபுள்ளியாக நாங்க ஒரு குழுவாக ஏதிர்காலத்தில் செயல்பட்டு அவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து தெளிவுபடுத்த முடிவு செய்துள்ளோம்.

மேலும் பௌத்த மதம் மற்றும் இந்து மதம் ஆகிய இரண்டு மதமும் சகோதரம் போன்ற ஒன்றே. எனவே இனவாத்தை விடுத்து சகோதர்ர்களாக நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். – என்றார்.

# யாழ்ப்பாணம் பெரியபுலம் ம.வியின் 200ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு



– எஸ்.நிதர்ஷன் –

யாழ் பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வாகன பேரணியொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.



இப்பாடசாலையின் 200 ஆவது ஆண்டு விழா இன்றும் நாளையும் நடைபெற உள்ள நிலையில் இதன் முதற்கட்டமாக நேற்று வியாழக்கிழமை இப்பேரணி நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் ந. பரமேஸ்வரன் கொடி அசைத்து பாடசாலை மூன்றிலில் பேரணியை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து பேரணி யாழின் பல இடங்களையும் சுற்றி வந்து நிறை வடைந்தமை குறிப்பிடத்தக்கது.



பாடசாலையில் 200 வது ஆண்டைக் குறிக்கும் சின்னத்துடன் பல்வேறு வாகனங்கள் ஊர்தியாகச் சென்றிருந்தன.

பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியாங்களுடனும், மயிலாட்டம், ஒயிலாட்டங்களுடனும் பல்வேறு வாகனங்களில் மாணவர்களும் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் பேரணியாக வலம் வந்திருந்தமை குறிப்பிடத்தக்து.

# ஐ.தே.க. முகவராக விக்கி நயவஞ்சகத் துரோகம்!

## சீறுகின்றார் கஜேந்திரன் எம்.பி.



– எஸ்.நிதர்ஷன்–

இந்தியாவின் தேவைக்காகவே 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்ற நிலையில் இந்தியாவை மகிழ்விக்கும் வகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விக்னேஸ்வரன் தரப்பும் செயல்படுகின்றன தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் குற்றச்சாட்டியுள்ளார்.

இவர்களின் ஏமாற்று நாடகங்களையும் துரோகத்தனத்தையும் எமது மக்கள் சரியான முறையில் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் விக்னேஸ்வரன் தரப்பிற்கும் இடையிலான சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் விக்னேஸ்வரன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி இருக்கிறார் எனவும் இதனை நடைமுறைப்படுத்துவதாக நம்பிக்கையும் வெளியிட்டு இருக்கின்றார் எனவும் விக்கினேஸ்வரன் கூறியிருக்கின்றார்.

ஆனால் எங்களைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களால் நீண்ட காலமாக நிராகரிக்கப்பட்டு வந்த ஒரு சட்டம் மூலமே 13 ஆவது திருத்தச் சட்டம். தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாக கொண்டுவரப்பட்டது. இருந்த போதும் தற்போது நடைமுறையில் உள்ள அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என விக்னேஷ்வரன் தரப்பும் கூட்டமைப்பும் கோருவது மக்களுக்காக அல்ல.

தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற துரோகத்தனமான ஒரு செயற்பாடாகவே நாங்கள் இதனைப் பார்க்கிறோம். இந்த விக்னேஸ்வரன் தரப்பும் கூட்டமைப்பு இன்று ஒரே கருத்துடன் ஒரே அணியாகவே செயல்படுகின்றனர். இந்த 13 வது திருத்தத்தை தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வாகவோ தொடக்கப் புள்ளியாகவோ ஏற்றுக் கொள்ள நாம் தயாராக இல்லை.

இன்று நாடு பொருளாதார ரீதியாக பாதாளத்தில் இருக்கும் நிலைமையில் சர்வதேச தரப்பை நாங்கள் சரியான முறையில் கையாள வேண்டும். இந்த நேரத்தில் எங்களுக்கான தீர்வு சமஷ்டி அடிப்படையிலானது என்று சொல்லி அந்த சமஷ்டித் தீர்வைப் பெறுவதற்கு நாம் சர்வதேச அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

அதற்கு மாறாக 13 ஆவது திருத்தத்தைக் கேட்டு அரசாங்கத்தை நெருக்கடியில் இருந்து விடுவிப்பதற்கு துணை போவது என்பது எமது மக்களுக்கு இழைக்கப்படும் மாபெரும் துரோகம். இந்த நிலைமை தொடர்வது தமிழர்களின் எதிர்காலம் பலியிடப்படும் செயற்பாடாகவே இது அமையும்.

இந்தியாவின் தேவைக்காக, இந்திய –,மேற்கு நாடுகளின் முகவராக உள்ள ரணிலை அடுத்த தேர்தரிலும் வெல்ல வைப்பதற்கான முயற்சி நடைபெறுகின்ற இடத்தில் அவரை சிங்கள மக்கள் மத்தியில் நல்லவராக, வல்லவராக காட்டுவதற்கான முயற்சியில் விக்னேஸ்வரன் ஈடுபட்டுள்ளார்.

தமிழ் மக்கள் நம்பி வாக்களித்த போதும் அந்த நம்பிக்கையிற்கு மாறாக செயற்படுகிற விக்கினேஸ்வரன் போன்றவர்கள் உண்மையில் ஒரு நம்பிக்கை துரோகி. அவரெல்லாம் அடுத்த தேர்தலில் வெல்லப் போவதில்லை. இப்போது வெற்றிபெற வாக்களித்த மக்களே எதிர்வரும் தேர்தல்களில் அவரைத் தோற்கடிப்பார்கள்.

சிங்கள மக்களாலே நிராகரிக்கப்பட்ட கட்சியாக இருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சியியை கட்டி எழுப்புவதற்கும் அதனோடு சேர்ந்த ஆதரவு கட்சிகளையும் வளர்ப்பதற்கான முயற்சியாக இத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்தக் கட்சிகளை வளர்ப்பதற்கான ஒரு பிரச்சாரத் தளமாகவே இந்த மாகாண சபை முறை தொடர்பில் பேசப்படுகிறது.

இந்த செயற்பாடு முழுக்க முழுக்க ஐக்கிய தேசியக் கட்சியை கட்டியெழுப்பப்புவதாகவே அமையும். அந்தக் கட்சியின் மறை முக முகவராகவே இங்கே விக்னேஸ்வரன் செயற்பட்டு கொண்டிருக்கிறார் என்பதையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே விக்கினேஸ்வரனின் இந்த நயவஞ்சக துரோகத்தனங்களில் எமது மக்கள் சிக்கிக் கொள்ளக் கூடாது. விக்கி போன்ற நயவஞ்சகத் துரோகிகளை தமிழ் மக்கள் முற்றாக இனம் கண்டு நிராகரிக்க வேண்டும்.

இந்தியாவின் தேவைக்காகவே இந்த 13ஆவது திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சி முன்னெடுக்கப்படுகின்ற நிலைமையில் அதனைப்பற்றி பற்றி பேசுவதன் மூலம் இந்தியாவை மகிழ்விக்க கூடியதாக இருக்கும்.

இந்தியாவிற்கு தேவைப்படுகிறது என்னவென்றால் ரணிலை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தாங்கள் சொல்வதை கேட்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். அதனூடாக தங்களுடைய இந்திய நலன்களை முதலில் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஆகையினால் வட கிழக்கு சிங்களமயமாக்கல் செய்தாலும் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் அதனை எதிர்க்காத நிலையை ஏற்படுத்தும் செயற்பாடுகளை தங்கள் முகவர்கள் ஊடாக முன்னெடுக்கிறது. அதே போன்றுதான் 13 ஆவது திருத்தத்தையும் இந்தியா அனுகுகின்றதது.

இதேவேளை மாகாண சபையில் எதனையும் செய்ய முடியாது, எதுவுமே இல்லை என்று சொல்லி தமிழீழப் பிரகடனத்தை செய்து விட்டு சென்றவர் தான் வரதராஜபெருமாள். அதேபோன்று அடுத்ததாக வந்த முதலமைச்சர் பிள்ளையான் கூட ஒரு கதிரையை கூட வாங்க முடியாது, எதுவும் இல்லாத ஒன்று என்று சொல்லியிருந்தார். இதற்கு மேலாக இன்றைக்கு 13 அமுலாக்கம் தொடர்பில் பேசுகின்ற விக்னேஸ்வரன் கூட 13 இல் எதுவும் இல்லை, எதனையும் செய்ய முடியாது என்று முதலமைச்சராக இருந்த காலத்தில் சொல்லியிருந்தார்.

ஆனால் இன்றைக்கு இந்தியாவின் தேவைக்காகவும் இந்தியாவின் விருப்பதற்காகவும் 13 குறித்து பேசுகின்றனர். இது அனைத்தும் எமது மக்களை ஏமாற்றுகின்ற நாடகம் என்பதுடன் இத்தகைய துரோகத்தனங்களை நயவஞ்சகங்களையும் எமது மக்கள் சரியான முறையில் புரிந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம். – என்றார்.

# இமாச்சல், உத்தரகண்ட் கனமழை, நிலச்சரிவு: 81 பேர் பலி, பஞ்சாபிலும் திடீர் வெள்ளம்!




தொடர்ச்சியாக பெய்துவரும் கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவுகள் காரணமாக இமாச்சலப் பிரதேசம், உத்தரகண்ட் மாநிலங்களில் இதுவரை 81 பேர் உயிரிழந்தனர். இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இமாச்சலில் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 71 ஆக அதிகரித்துள்ளது. புதன்கிழமை மேலும் பல உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து மாநிலத்தின் முதன்மைச் செயலாளர் ஒன்கர் சந்த் சர்மா கூறுகையில், கடந்த மூன்று தினங்களில் 71 பேர் உயிரிழந்தனர்.13 பேர் குறித்த தகவல்கள் இன்னும் தெரியவில்லை. ஞாயிற்றுக்கிழமை இரவு வரை மொத்தம் 57 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன

இமாச்சலப் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பெய்து வரும் கனமழையால் சிம்லா உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. அங்கு சம்மர் ஹில், ஃபாகி மற்றும் கிருஷ்ணாநகர் ஆகிய மூன்று பகுதிகள் நிலச்சரிவினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இமாச்சல் மாநிலத்தின் அவசர கால செயல்பாட்டு மையத்தின் தகவல்படி, கடந்த ஜுன் 24 திகதி பருவமழை தொடங்கியதில் இருந்து மழைத் தொடர்பான சம்பவங்களால் இதுவரை 214 பேர் உயிரிழந்தனர். 38 பேர் காணாமல் போய் உள்ளனர்.

சிம்லா மாவட்டத்தின் துணை ஆணையர் ஆதித்ய நேகி கூறுகையில், சம்மர் ஹில் மற்றும் கிருஷ்ணாநகர் பகுதிகளில் தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. சம்மர் ஹில் பகுதியில் இருந்து 13 உடல்களும், ஃபாஹி பகுதியில் 5 உடல்களும், கிருஷ்ணா நகர் பகுதியில் 2 உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. திங்கள்கிழமை நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட சம்மர் ஹில் சிவன் கோயிலின் அடியில் சில உடல்கள் சிக்கியிருக்கலாம். தொடர் மழை காரணமாக நிலச்சரிவு ஏற்படும் என்ற அச்சம் காரணமாக கிருஷ்ணாநகரில் உள்ள 15 வீடுகளில் இருப்பவர்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கிருஷ்ணா நகரின் துணைப் பகுதிகளான இண்டோரா மற்றும் ஃபாட்பூரில் இருந்து 1,731 பேர் மீட்கப்பட்டுள்ளனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து மக்களை மீட்கும் பணிகள் அனைத்தும் விமானப் படை ஹெலிகாப்டர்கள், இராணுவம், தேசிய பேரிடர் மீட்பு படையினரின் உதவியுடன் நடந்து வருகிறது என்று இணை ஆணையர் நிபுன் ஜிந்தால் தெரிவித்தார்.

# அக்காள்மடம் மீனவர்களுடன் முதல்வர் ஸ்டாலின் சந்திப்பு!

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் வட்டம், பாம்பன் ஊராட்சி, அக்காள்மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு நேரில் சென்று, அங்குள்ள மீனவர் குடும்பத்தினருடன் முதல்வர் ஸ்டாலின் கலந்துரையாடினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பில், ராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு மற்றும் மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக ராமநாதபுரத்திலிருந்து ராமேஸ்வரம் செல்லும் வழியில், அக்காள்மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு முதல்வர் ஸ்டாலின் நேற்று நேரில் சென்று மீனவப் மக்களிடம் அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

இதன்போது, பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களையும் முதல்வர் பெற்றுக் கொண்டார். அத்துடன், அக்காள்மடம் மீனவர் குடியிருப்பு பகுதியில் உள்ள மாணவர்களுடன் கலந்துரையாடி, அவர்களது கல்வி குறித்து கேட்டறிந்தார்.



# சிறியரக விமானம் விபத்து: மலேசியாவில் 10 பேர் பலி!






மலேசியாவின் மத்திய செலான்கூர் மாநிலத்தில் சிறியரக விமானம் ஒன்று இன்று விபத்துக்குள்ளானதில் 10 பேர் பலியாகினர்.

குறித்த விமானத்தில் பயணித்த 8 பேரும் விமானம் விபத்துக்குள்ளான பகுதியில் இருந்த இருவருமாக 10 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப் படுகிறது.

விமானத்தில் இரண்டு விமானிகளும் 6 பயணிகளும் பயணித்துள்ளனர். அதேநேரம் விமானம் விபத்துக்குள் ளானமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மலேசியாவின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித் துள்ளது.



## விமானத்தின் குளியலறையில் மயங்கி விழுந்து உயிரிழந்த விமானி!




நடுவானில் பறந்துகொண்டிருந்த விமானத்தில் விமானி ஒருவர் உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மியாமியில் இருந்து சிலி நோக்கி 271 பயணிகளுடன் லாதம் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் புறப்பட்டு சென்று கொண்டிருந்தது. அப்போது விமானி இவான் ஆண்ட் ரூவுக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது.

அவருக்கு உடனடியாக முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.எனினும், அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. குளியலறை சென்ற அவர் மயங்கி விழுந்தார்.

இதையடுத்து, விமானம் உடனடியாக பனாமா விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

விமானம் தரையிறங்கியதும் விமான நிலைய மருத்துவக் குழுவினர் வந்து விமானியை பரிசோதனை செய்தனர். அவருக்கு உயிர்காக்கும் கருவிகளுடன் உரிய சிகிச்சை அளிக் கப்பட்டது. எனினும், அவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட டுள்ளது. 25 ஆண்டு அனுபவம் வாய்ந்த இந்த விமானி மறைவுக்கு விமான நிறுவனம் இரங்கல் தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த சம்பவம் நடந்துள்ளது. விமானி இறந்ததையடுத்து விமானம் பனாமா சிட்டி விமான நிலையத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டது.

## ஹவாய் தீ: 100 ஐ கடந்த உயிரிழப்பு!

அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் காட்டு தீ பரவல் காரணமாக பலியான வர்களின் எண்ணிக்கை 100 ஐ கடந் துள்ளது.

அத்துடன், தீப்பரவலினால் ஆயிரக் கணக்கான மக்கள் காணாமல் போயுள் ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர மவுயி தீவில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்கரை நகரான லஹய்னாவின் 80 சதவீதமான பகுதிகள் தீயினால் சேதமடைந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், குறித்த பகுதியில் அவசரகாலநிலை பிரக டனப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக் கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் கடுமையான புயல் வீசுவதனால் காட்டு தீ தொடர்ந்தும் புதிய பிரதேசங்களுக்கும் பரவி வருகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.



# அதி கூடிய புள்ளி பெற்ற மாணவர் சுற்றுலா முறையில் ஊக்குவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கெகுணகொல்ல முஸ்லிம் தேசிய கல்லூரியில் வழமையாக தவணைப் பரீட்சைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதற்குப் பதிலாக அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை இலவசமாக கல்வி சுற்றுலா அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்தத் திட்டத்தை கல்லூரி அதிபர் ஏ.எம்.எம. நிஸாத் ஆலோசனையின் பேரில் நடைமுறைப்படுத்தினர்.

இம்முறை முதலாம் தவணைப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற தரம் 06 – 11 வரையான பாடசாலை மாணவர்களை உற்சாகப்படுத்துவதற்காகவும், ஏனைய மாணவர்களை கற்றலின்பால் ஊக்குவிப்பதற்காகவும் இந்த இலவசமாக சுற்றுலா ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்போடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சுற்றுலாவில் தெதுரு ஓயா நீர்த்தேக்கம், மினுவாங்கட்ட அணைக்கட்டு, யாப்பஹு்வ இராசதானி. நூதன சாலை, பண்டுவஸ்நுவர மட்பாண்டத் தொழிற்சாலை ஆகிய இடங்களை மாணவர்கள் பார்வையிட்டனர்.



# அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்துக்கு முனவ்வரா மாணவர்கள் சுற்றுலா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்விச் சுற்றுலாவின் ஒரு அங்கமாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற அக்கரைப்பற்று முனவ்வரா கனிஸ்ட கல்லூரி மாணவர்களுக்கு பொலிஸாரால் எதிர்பாராத விதமாக கௌரவம் வழங்கப்பட்டது.

கல்விச் சுற்றுலாக்களின் போது மாணவர்களை பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதில் ஆசிரியர்கள் அவ்வளவு அக்கரை செலுத்துவதில்லை.

இருந்தும் எந்தவிதமான அச்சமும் இன்றி பொலிஸ் நிலையம் பார்க்கச் சென்ற மாணவர்களை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ. எம்.எஸ்.பி.விஜயதுங்க மற்றும் நிலையத்தில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் அன்புடன் வரவேற்று, பொலிஸ் நிலைய நடவடிக்கைகளை மாணவர்களுக்கு காண்பித்தனர்.



இந்த நிகழ்வின் போது பொலிஸ் உத்தியோஸ்தர்களான முஹம்மட் அனீஸ் மற்றும் தாஹிர் ஆகியோர் உடனிருந்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உதவி புரிந்தனர்.

# மத்திய மாகாண உதைபந்தாட்டப் போட்டி களுகமுவ மத்தி, கம்பளை ஸாஹிரா சம்பியன்




**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மத்திய மாகாண பாடசாலை களுக்கிடையிலான ஆண்களுக் கான உதைபந்தாட்ட போட்டி கள் கடந்த வாரம் கம்பளை வீக லுவத்த மற்றும் கம்பளை ஸாஹி ராக் கல்லூரி மைதானங்களில் இடம்பெற்றன.

போட்டி நிகழ்ச்சிகளில் 16 வய துக்கு உட்பட்ட போட்டியில் களு கமுவ மத்திய கல்லூரி சம்பிய னானது. கண்டி திருத்துவக் கல் லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

18 வயதுக்கு உட்பட்டவர்களுக் கான போட்டியில் களுகமுவ மத் திய கல்லூரி சம்பியனாகவும், கொட்டகல தமிழ் மகா வித்தியா லயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

20 வயதுக்கு உட்பட்டவர்களுக் கான போட்டியில் கம்பளை ஸாஹி ராக் கல்லூரி சம்பியனாகவும், கண்டி கிங்ஸ்வுட் கல்லூரி இரண் டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.



## கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவியின் பரதநாட்டிய அரங்கேற்றம்

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகி யல் கல்லூரியின் மாணவியும், நாட்டிய கலா வித்தகர் ஸ்ரீமதி சுதர்சினி கரன்சனின் மாணவியு மான செல்வி நியோமி வெலிஜியா வில்சனின் பரதநாட்டிய அரங்கேற்றம் நாளை மறுதினம் 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இவர் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடனக் கலையைப் பயின்று அரங்கேற்றத்தை மேற் கொள்ளும் எட்டாவது மாணவியாவார்.

கலைத்தூது அழகியல் கல்லூரியின் உப அதிபர் அருட் பணி செ.அன்புராசா அடிகள் தலைமை யில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக கரவெட்டி குருஷேத்திரம் நடனாலயத்தின் இயக்குநர் செல்வி பேரின்பநாயகி சிவகுரு கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

## காணித் தகராறு கைகலப்பாக மாறியது: அண்ணனை வெட்டிக் கொன்ற தம்பி!

காணித் தகராறு காரணமாக மூத்த சகோதரனை இளைய சகோதரன் வெட்டிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் சூரியவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக் கல்ல பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் (16) இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 29 வயதுடைய இளைஞர் உயிரி ழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், 24 வயதுடைய அவரின் இளைய சகோதரர் பொலிஸில் சரணடைந்த பின்–னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சூரிய வெவ பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகி–ன்றனர்.

## வறண்ட காலநிலையால் குழந்தைகளுக்கு ஆபத்து!

வறண்ட காலநிலை மற்றும் தூசி காரணமாக சிறுவர்களுக்கு மூச்சுத் திணறல் மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் தற்போது அதிகரித்து வருகின்றன என்று பொரளை ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் குழந்தை நல வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள் ளார்.

மூச்சுத் திணறல் உள்ள குழந்தைகளுக்குப் பகல், இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் இருமல் ஏற்படுவதுடன் மூச்சு விடுவதில் சிரம மும் ஏற்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிகுறிகள் தென்பட்டால் எவ்வித அச்சமும் இன்றி குழந்தைகளை மருத்துவமனைக்கு அழைத்து செல்லுங்கள் என்று பெற்றோர்களிடம் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா வேண்டுகோள் விடுத்துள் ளார்.

## வல்வெட்டிதுறை இளைஞன் கனடாவில் உயிரை மாய்ப்பு!

யாழ்ப்பாணத்தில் இருந்து கனடாவுக்குப் புலம்பெயர்ந்த இளைஞன் ஒருவர் மாடியில் இருந்து குதித்து உயிரை மாய்த் துளார்.

அந்த இளைஞன் 16 ஆவது மாடியில் இருந்து குதித்தே உயிரை மாய்த்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளைஞன் வடமராட்சி வல்வெட்டிதுறை தீருவில் பகுதியைச் சேர்ந்த ரகுபதி ஆனந்த் (31) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த இளைஞன் கனடா மேம்பிள் பகுதியில் குடும்பத் துடன் வசித்து வந்தமை குறிப் பிடத்தக்கது.

உயிரிழந்த நபர் மேலிருந்து விழும் போது இன்னொருவர் மீது மோதுண்டமையால் அவரும் உயிரிழந்துள்ளார் என்று தெரி விக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாகக் கனடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒரு மாதத்துக்கு மாத்திரமே நெல் கையிருப்புப் போதும்!

## சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் தெரிவிப்பு

ஒரு மாத காலத்துக்கும் குறைவான காலப் பகுதிக்கான நெல் மாத்திரமே தம்வசம் கையிருப்பில் உள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் தற்போது 45 லட்சம் கிலோ நெல் மாத்திரமே கையிருப்பில் உள்ளது என்று சபையின் தலைவர் புத்திக்க இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.

நெல் கிடைக்காத காரணத்தால் மூடப்பட்டுள்ள ஹம்பாந்தோட்டை நெல் களஞ்சியசாலை, விவசாய அமைப்புகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டால் திறப்பது தொடர்பில் ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அமைச்சர் மஹிந்த அமரவீர அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் நாளை கலந்துரையாடலொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார் என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக்க இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.

# 73 தேக்கங்களின் நீர்மட்டம் குறைவு: நீர்ப்பாசன திணைக்களம் அறிவிப்பு

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக 73 பிரதான நீர்த் தேக்கங்களின் நீர் கொள்ளளவு 29 வீதம் வரை குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவு பணிப்பாளர் சுதர்ஷனி விதானப்பத்திரண கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் வறட்சியால் நாட்டின் பல மாவட்டங்களில் குடி தண்ணீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதனிடையே நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியால் 15 மாவட்டங்களிலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த 75 ஆயிரத்து 287 பேர் இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# ஒலிம்பியாட்டில் தங்கம் வென்ற மாணவிக்குக் கௌரவம்



(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று தேசிய சாதனை புரிந்த மல்வத்தை விபுலானந்தா மாணவி சிவரூபன் ஜினோதிகாவை காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் வீடு தேடிச் சென்று கௌரவித்தார்.

அத்துடன் கனடாவில் வாழும் அசோகன் என்பவரால் வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபா பணத்தையும் அன்பளிப்புச் செய்தார்.

அத் தருணம் பாடசாலை அதிபர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன், உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்ட ஆசிரியர்கள் அங்கு கலந்து சிறப்பித்தனர்.

# நூல் வெளியீட்டு விழா

(நவாஸ்)

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களின் குடியியல் விவகாரங்களை நெறிப்படுத்தும் தனியார் சட்டமாகிய முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் சமகாலத்தில் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்தவேளை முஸ்லிம் விவாக விவாகரத்து சட்ட திருத்தத்துக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை இஸ்லாமிய நோக்குடன் தெளிவுபடுத்தும் விதமாக கலாநிதி றவூப் ஸெய்ன் எழுதிய "முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் – ஓர் இஸ்லாமிய நோக்கு" எனும் நூல் வெளியீடு நேற்று (17) பிற்பகல் 06.30 மணியளவில் அக்கரைப்பற்று ஹல்லாஜ் வள நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பல பிரமுகர்களும் கலந்து புத்தகத்தின் பிரதியினை பெற்றுக் கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.08.2023




அனுசரித்து விட்டுக்கொடுத்து நடந்து கொண்டால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும். தியானம் அல்லது பிரார்த்தனை செய்வதற்கு இன்றைய நாள் ஏற்றது.

உங்கள் செயல் திறனுக்கு விமர்சன ரீதியான பாராட்டுக்கள் கிடைக்கும். உங்களின் சிறப்பான தகுதிகளை வெளிக்கொணர்ந்து வெற்றி பெறுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகளும் கிடைக்கலாம்.

உங்கள் நகைச்சுவை அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத்தொகை பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை ஏற்படுத்தும்.

நீங்கள் திடமாக காணப்படுவீர்கள். இது உங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கும்.




இன்று சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். திரைப்படம் பார்த்தல் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழ்நிலை காணப்படும். சில சமயங்களில் உங்கள் பொறுமையை இழப்பீர்கள். உங்களின் நாணயம் சந்தேகிக்கப்படலாம்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். சகஜமாக நடந்து கொள்வது நல்லது.

பணப்புழக்கம் இன்று மகிழ்ச்சிகரமாக இருக்காது. கூடுதல் பொறுப்பு காரணமாக இன்று செலவுகள் ஏற்படும்.

கால் வலி மற்றும் தலிவலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்கள் செயல்களை அறிவுப்பூர்வமாக அணுக வேண்டியது அவசியம். இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தாகத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சில கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பரம்மரிக்க சிறப்புடன் திட்டமிட வேண்டும்.

இன்று ஆரோக்கியம் மிதமாக இருக்கும். கால்களில் வலி மற்றும் விறைப்புத்தன்மை ஏற்படலாம். இதனால் கவலை ஏற்படும்.




இன்று உங்கள் நண்பர்கள் மற்றும் பரிச்சயமானவர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் நண்பர்களை மகிழ்விப்பீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் உங்கள் மீது நல அபிப்பிராயம் ஏற்படும்.

உங்களின் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். நிதிநிலைமை செழிப்பாக இருக்கும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று உங்கள் எதிர்காலத்திற்காக உங்களை முன்னேற்றிக் கொள்ளும் வழி வகைகள் கிடைக்கும். எதிர்மறையான போக்கை தவிர்ப்பதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். விரும்பத்தகாத சூழ்நிலைகளை தவிர்க்க உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது சர்ச்சைக்குரிய விஷயங்களை தவிர்க்கவும். உங்கள் துணையிடம் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பது கடினமாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

பதட்டம் காரணமாக உங்கள் கால்களில் வலி ஏற்படலாம். அமைதியாக இருப்பதும் தியானம் மேற்கொள்வதும் சிறந்தது.




இன்று பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்த வேண்டும். அவநம்பிக்கை தரும் எண்ணங்களை தவிர்த்து நேர்மறையாக எண்ணினால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று உறுதியான மனநிலையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறிருந்தால் தடைகளை சமாளித்து பணிகளை சிறப்பாக ஆற்ற இயலும்.

சில குடும்ப பிரச்சினைகளில் உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். இதனால் இருவரிடையே கருத்து வேற்பாடு காணப்படும்.

இன்று பண வரவிற்கான சாத்தியம் கிடையாது. கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

இன்று ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படலாம்.




இன்று உணர்ச்சிவசப்பட்டு காணப்படுவீர்கள். உங்களிடம் காணப்படும் பதட்டம் உங்கள் பேச்சில் வெளிப்படும். உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த பிரார்தனை மேற்கொள்ளுங்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். கூடுதல் பணிச்சுமைகள் உங்களுக்கு கவலையை அளிக்கும். சிறந்த பலனைக் காண நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

5உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் நட்போடு பழக வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று தேவையற்ற செலவுகள் செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

கணுக்கால் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது சிறிது பதட்டமாக காணப்படுவீர்கள்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாகக் கையாள்வீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் பரஸ்பர அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உறவின் பிணைப்பை வலுபடுத்தும்.

நீங்கள் பங்குகளில் செலுத்தும் பணம் லாபத்தை அளிக்கும். எதிர்பாராத பண வரவுக்குச் சாத்தியம் உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.08.2023

## தனுசு

இன்று மிகவும் சாதகமான நாள். உங்கள் இனிமையான வார்த்தை மூலம் நெருக்கமானவர்களின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள். நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

பணியிடத்து சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களால் பாராட்டப்படும்.

உங்கள் காதலரை இன்று மாலை சந்தித்து மகிழ்ச்சியுடன் இருக்கலாம். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையை மகிழ்விக்கலாம்.

இன்று பண வரவு மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்கும். இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.

## கும்பம்

இன்று பலன்கள் தாமதமாக கிடைக்கும் சூழ்நிலை காணப்படுகின்றது. இன்று மகிழ்சிகரமான நாளாக காணப்படாது. இன்று அதிகமான எதிர்பார்ப்பு கூடாது.

அதிகமான பணிகள் கவலையை அளிக்கும். திட்டமிட்டு அதன்படி பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க தவறுவீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைக்க இனிமையான வார்த்தைகளை பேசுங்கள்.

நிதிநிலைமை அதிருப்தி அளிக்கும் வகையில் இருக்கும். உங்கள் நிதி தேவைகளை சௌகரியமாக கையாளும் சூழ்நிலை இன்று இருக்காது.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காக பணம் செலவு செய்ய நேரலாம். நீங்கள் உங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுங்கள்.

## மகரம்

இன்று உங்களிடம் அமைதியின்மை காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் இந்த சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம். உங்கள் எதிர்கால வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை சிறப்பாக இயற்ற நீங்கள் திட்டமிட வேண்டும். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவையில்லாத செலவினங்கள் ஏற்படும். கவனமாக திட்டமிடவும்.

## மீனம்

இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்களின் வளர்ச்சிக்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்துக்கு முன் முடிக்க இயலும். இன்று பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் சில மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று சொத்துக்கள் வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் உடல் நலம் சிறப்பாக இருக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES — 20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES — 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
CENTRALPAR JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்



#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park